STC.No. 215-2025
நாள் 13.02.2026.
P.W.1 - (தங்கமுனியாண்டி )
எதிரி ஆஜர்.
எதிரி தரப்பில் **குறுக்கு விசாரணை**

எனக்கு எழுதப்படிக்க தெரியும். நான் 12ம் வகுப்பு படித்துள்ளேன். என் சட்ட அறிவிப்பு, புகார் மனு மற்றும் நிருபண வாக்குமூலத்திற்கு நான்தான் விபரம் சொன்னேன். நான் கடந்த 9 மாதங்களாக விபத்து ஏற்பட்டு, வேலை பார்க்கவில்லை. அதற்கு முன் நான் வெளிநாட்டில் வேலை பார்த்து எலக்ட்ரிக்கல் மற்றும் பிளம்மிங் காண்ட்ராக்ட் வேலை செய்தேன் மற்றும் விவசாயமும் செய்தேன். நான் வெளிநாட்டில் பிளம்மிங் சூப்பர்வைசராக வேலை பார்த்தேன். நான் 2008 முதல் 2013 முதல் மற்றும் 2019 முதல் 2021 வரை வெளிநாட்டில் வேலை பார்த்தேன். எனக்கு ஒரே பெண் குழந்தை. நான் பிளம்மிங் கூலி வேலை பார்க்கிறேன் என்றால் காண்ட்ராக்ட் செய்கிறேன். கடை வைத்திருக்கவில்லை. விவசாயம் நிலம் என் ஊரில் என் அப்பா பெயரில் உள்ளது. விவசாய நிலம் 5 ஏக்கர் உள்ளது. என் உடன் பிறந்தவர்கள் 7 பேர். நானும் தம்பியும் மட்டும் விவசாய நிலத்தை பார்த்துக் கொள்வோம். தற்போது நிலத்தில் மாட்டு தீவணம் பயிர் செய்துள்ளோம். அது தவிர எனக்கு வேறு தொழில் கிடையாது என்றால் சரி.

எதிரியை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் மருத்துமனைக்கு சென்றதில் பழக்கம். என் சொந்த ஊர் மல்லி, முள்ளிக்குளம் ஆகும். முள்ளிக்குளத்தில் இருந்து திருவில்லிபுத்தூருக்கு 10 கிலோமீட்டார் தொலைவு என்றால் 8 கிலோமீட்டர். எதிரி என் உறவினர் அல்ல. நான் எதிரியுடன் பழகிய காலத்தில் எதிரி எங்கு குடியிருந்தார் என்றால் எனக்கு தெரியாது மருத்துமனையில் இருந்தது தெரியும். எதிரி அவருக்கு 2 குழந்தைகள் இருப்பதாக சொன்னார். எதிரியின் குழந்தைகளின் வயது எனக்கு தெரியாது. எதிரியின் குழந்தைகள் என்ன படிக்கிறார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் பள்ளிக்கூடம் படிப்பதாக சொன்னார் வகுப்பு தெரியாது. என் சட்ட அறிவிப்பு, புகார் மனு மற்றும் நிருபண வாக்குமூலத்தில் எதிரி எங்கு குடியிருந்து வருகிறார் என்று சொல்லவில்லை என்றால் சரி. எதிரி எனக்கு கிருஷ்ணசாமி மூலமாக பழக்கம் என்றால் இல்லை. அவரை வைத்து தட்டச்சு அலுவலகத்தில் வைத்து பணம் கொடுத்தேன். கிருஷ்ணசாமியின் தட்டச்சு அலுவலகம் திருவில்லிபுத்தூரில் முனியாண்டி கோவில் எதிரில், சக்கரகுளம் அருகே உள்ளது. நான் வருமான வரி தாக்கல் செய்கிறேனா என்றால் இல்லை. எனக்கு வருமான வரி செலுத்தும் அளவிற்கு வருமானம் வரவில்லை என்றால் சரி. எனக்கு 2 வங்கிகளில் வங்கி கணக்கு உள்ளது. நான் கேவிபி வங்கி, செங்கமலநாச்சியார்புரம் சிவகாசி கிளையில் வங்கி கணக்கும், ஐஓபி வங்கி, நீதிமன்ற வளாகத்தில் ஒரு வங்கி கணக்கும் உள்ளது. என் வங்கி கணக்கு புத்தகத்தை பார்த்தால் நான் எவ்வளவு வரவு செலவு வைத்திருந்தேன் என்ற விபரம் தெரியவரும் என்றால் சரி. தற்போது என் வங்கி கணக்கில் எவ்வளவு இருப்பு உள்ளது என்றால் கேவிபி வங்கியில் ரூ.15,000/-ற்குள் இருக்கும், ஐஓபி வங்கியில் ரூ.1,000/-ற்குள் இருக்கும்.

நான் 10.07.2024 அன்று கடன் கொடுத்ததாக சொல்லும் தேதி வரை என் வங்கி

கணக்கு பட்டியலை பார்த்தால் என் வங்கி கணக்கு விபரம் தெரியவரும் என்றால் ஆம். வருமானவரி சட்டத்தின் படி ரூ.20,000/-ற்கு மேல் ரொக்கமாக பணம் கொடுக்கக் கூடாது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எதிரிக்கு நான் ரூ.10 லட்சம் கொடுத்ததாக சொன்ன தேதியில் என் கைவசம் ரூ.10 லட்சம் இருந்தததாக காட்ட வங்கி கணக்கு பட்டியலோ வேறு ஆவணங்களோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. நான் பணம் கொடுத்ததாக சொல்லும் தேதி என்ன கிழமை என்றால் கிழமை ஞாபகம் இல்லை. சாட்சி தற்போது புதன்கிழமை வரும் எனத் தெரிவித்தார். என் சட்ட அறிவிப்பு, புகார் மனு மற்றும் நிருபண வாக்குமூலத்தில் எனக்கு ரூ.10 லட்சம் எவ்வாறு வந்தது என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரி. நான் கொடுத்ததாக சொல்லும் ரூ.10 லட்சம் எனக்கு எவ்வாறு வந்தது என்றால் என் வெளிநாட்டு வருமானம், விவசாயம் மற்றும் மாடு வருமானம் ஆகியவற்றில் இருந்து சிறுக சிறுக சேர்த்து வைத்தது ஆகும். நான் சிறுக சிறுக சேர்த்ததாக சொல்லும் சேமிப்பு வங்கியில் இருந்ததா என்றால் இல்லை, நான் வீட்டில் வைத்திருந்தேன்.

நான் அந்த பெரிய தொகையை கையில் வைத்திருந்ததாக எதனால் சொல்கிறேன் என்றால் மகள் அடுத்த ஆண்டு பொறியியல் படிப்பதாக இருந்தது, எவ்வளவு கட்டணம் என்று தெரியாது பணத்தை கையில் வைத்துக் கொள்வோம் என கையில் வைத்திருந்தேன். தற்போது மகளுக்கு 20 வயது ஆகிறது. என் மகள் தற்போது தியாகராஜா பொறியியல் கல்லூரி, மதுரையில் படிக்கிறார். என் மகளுக்கு கல்விக் கட்டணம் ரூ.2,50,000/- இருக்கும். நான் மகளுக்கு கல்வி கட்டணம் வெளியில் கடன் வாங்கிதான் செலுத்தினேன். எனக்கு மாத வருமானம் 25,30 ரூபாய் வரும். நான் தற்போது வரும் ரூ.25 ல் குடும்ப செலவு போக ரூ.10 லட்சம் சேமித்து வைக்க முடியாது என்றால் சரி. முன்னர், வெளிநாட்டில் சம்பாதித்ததில் சேமித்தது ஆகும். நான் பணத்தை ஒரே தவணையாக கொடுத்தேன். நான் கடன் கொடுத்ததாக சொல்லும்போது கடன் உறுதி சீட்டோ, வேறு பத்திரமோ எழுதி வாங்கவில்லை என்றால் ஆம். நான் ரூ.10 லட்சத்தை 500 ரூபாய் தாள்களாக கொடுத்தேன். மொத்தம் 20 கட்டுகள். நான் பணத்தை வட்டிக்கு கொடுக்கவில்லை.

நான் பணத்தை வங்கியில் வைப்பீடு செய்யாமல் வட்டியில்லாத கடனாக எதற்காக எதிரிக்கு கொடுத்தேன் என்றால் நான் எதிரியின் மருத்துவமனைக்கு சிகிச்சை குறித்து ஆலோசனைக்காக சென்றேன். எதிரி அவசர தேவை இருப்பதாகவும், பணம் கொடுத்து உதவ முடியுமா என்று கேட்டார். பணம் கொடுத்தேன். விசாரித்துவிட்டு கொடுப்போம் என தட்டச்சர் கிருஷ்ணசாமியிடம் கேட்டேன். எதிரியை நேரடியாக வரச் சொன்னார். பேசி உறுதி செய்துவிட்டு கொடுப்போம் எனச் சொன்னார். பல் அடிப்பட்டதாக சொல்வது 2023ம் ஆண்டிற்கு முன் வெளிநாட்டில் வேலை செய்யும்போது அடிப்பட்டது. எதிரியை நான் ஆலோசிக்க சென்ற தேதி எனக்கு நினைவில்லை. எதிரிக்கு பணம் கொடுத்ததாக சொல்லும் பணத்தை தட்டச்சு அலுவலகத்திற்கு நான் மற்றும் என் மனைவி இருசக்கர வாகனத்தில் பையில் வைத்து எடுத்துச் சென்றோம். பணம் கொடுத்தபோது கிருஷ்ணசாமி, நாதமுனிநைனார் மற்றும் என் மனைவி இருந்தோம். என் சட்ட அறிவிப்பு, புகார் மனு மற்றும் நிருபண வாக்குமூலத்தில் கிருஷ்ணசாமி, நாதமுனிநைனார் மற்றும் என் மனைவி இருந்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரி.

காசோலையை எதிரியே நிரப்பி கையொப்பம் செய்து கொண்டு வந்து கொடுத்தார். அந்த தட்டச்சர் அலுவலகத்தில் நிரப்பவில்லை என்றால் சரி. கிருஷ்ணசாமிக்கும்

எதிரிக்கும் பழக்கம் என்றால் சரி. ரூ.10 லட்சம் நான் வருமான வரியில் காட்டப்படாததால் அது கருப்பு பணம் என்றால் சரியல்ல, அது சிறுக சிறுக சேர்த்து வைத்த பணம். எனக்கு ரூ.10 லட்சம் கடன் கொடுக்கும் அளவிற்கு வருமானம் இல்லை என்றாலும் நான் வழக்கிற்காக எதிரிக்கு கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரி 10.07.2024 அன்று என்னிடம் பணம் வாங்கவில்லை என்றாலும் காசோலை வழங்கவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் கிருஷ்ணசாமிக்கும் கொடுக்கல் வாங்கல் உள்ளது என்றாலும் கிருஷ்ணசாமியிடம் கொடுத்த காசோலையை எதிரியிடம் இருந்து கூடுதல் பணம் பறிக்க வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. 10.07.2024 அன்று எதிரி திருவில்லிபுத்தூரில் அரசு மருத்துமனையில் காலை 7 மணி முதல் மாலை 7 மணி வரை வேலை பார்த்தார் என்றால் சரியல்ல. நான் கிருஷ்ணசாமி தூண்டுதலின் பேரில் பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

13/2/24

நீதித்துறை விரைவு நடுவர்.
திருவில்லிபுத்தூர்.